# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

-------

**IN THE COURT ASSISTANT SESSIONS JUDGE, HOSUR.**

**SC.No. 77/2022**

**CNR.No. TNK105-000980-2022**

Sessions Case – A1, A3 and A5 present. A4 absent. Petition filed and allowed

Deposition of witness for Prosecution **PW-1**

Name : Ramesh

Father's Name : Murugesan

Village :

Taluk :

Caste :

calling :

Religion :

Age : 47

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2024

**முதல் விசாரணை:-**

நான் கிருஷ்ணகிரி மாவட்டம் ஜெகதேவி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சூளகிரி தாலுக்காவில் உள்ள சப்படி என்ற ஊரில் கடை எண். 2960 என்ற டாஸ்மாக் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். 31.08.2015 அன்று சுமார் மாலை 4.00 மணிக்கு மேல் 4.30 ற்குள் ஆய்விற்காக மேற்பார்வையாளர் ஈஸ்வரன் என்பவருடன் பேரிகையில் உள்ள டாஸ்மாக் கடைக்கு ஆய்வுக்காக சென்றுவிட்டு திரும்பி வரும்போது புளியரசி காடு அருகில் வரும்போது காவல் துறை ஆய்வாளர் 5 நபர்களை விசாரித்துக்கொண்டிருந்தார். அவ்வாறு விசாரித்துக்கொண்டிருந்த நபர்களில் ஒரு நபர் காலமாகிவிட்டார், இன்றைய தினம் நீதிமன்றத்தில் 3 பேர் ஆஜராகியுள்ளனர். அப்போது போலீசார் எங்களை கூப்பிட்டு எங்கு போய்விட்டு வருகிறீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் டாஸ்மாக் கடை ஆய்விற்காக போய்விட்டு திரும்பி வருவதாக கூறினோம். அதற்கு காவல் ஆய்வாளர் டாஸ்மாக் கடை கேஸ் விஷயமாக தான் விசாரித்துக்கொண்டிருப்பதாக சொன்னார்கள். ஆய்வாளர் மேற்படி 5 நபர்களை

விசாரித்தப்போது தேன்கனிக்கோட்டை அருகில் உள்ள ஒரு கடை, தருமபுரி மாவட்டம் சாமியார்புரம் கூட்டு ரோடு அருகில் உள்ள ஒரு கடை, ஓசூர் பத்தளப்பள்ளியில் உள்ள ஒரு கடை, காமன்தொட்டியில் உள்ள ஒரு கடையையும், சூளகிரியில் உள்ள ஒரு கடையிலும் தாங்கள் பணம் திருடியதாக ஒப்புக்கொண்டார்கள். மேலும் தேன்கனிக்கோட்டை அருகில் டாட்டா ஏஸ் வண்டியை வழி மறித்து வழிப்பறி செய்ததாக ஒப்புக்கொண்டார்கள். டாட்டா ஏஸ் வண்டியில் ரூ 75,000/.- வழிபறி செய்ததாகவும், தேன்கனிக்கோட்டை அருகில் உள்ள டாஸ்மாக் கடையில் ரூ.64,000/- வழிபறி செய்ததாகவும், பத்தளப்பள்ளி டாஸ்மாக் கடையில் ரூ. 3 லட்சம், வழிபறி செய்ததாகவும், காமன்தொட்டி டாஸ்மாக் கடையில் ரூ. 2 லட்சம் வழிபறி செய்ததாகவும், சூளகிரி கடையில் ரூ. 1,64,000/- வழிபறி செய்ததாக ஒப்புக்கொண்டார்கள். அந்த பணங்களை தாங்கள் சொகுசான வாழ்க்கைக்காக தண்ணீர் அடித்து பலவிதங்களில் செலவு செய்ததாக கூறினார்கள். மேற்படி வழிபறி செய்ததற்காக தாங்கள் அப்பாச்சி மற்றும் டிஸ்கவர் என்ற இருசக்கர வாகனங்களை பயன்படுத்தியதாக கூறினார்கள். அந்த வழிபறி செய்ததற்கு தாங்கள் இரும்பு ராடு, கத்தி போன்ற ஆயுதங்களை பயன்படுத்தியதாக கூறினார்கள். மேற்படி எதிரிகள் சொல்லிக்கொண்டிருந்ததை போலீசார் லேப்டாப்பில் டைப் செய்துக்கொண்டிருந்தார்கள். அவ்வாறு டைப் செய்ததில் என்னையும் மேற்பார்வையாளராக ஈஸ்வரனையும் கையொப்பம் போடச்சொன்னார்கள். என்னிடம் காட்டப்படும் 5 எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பங்கள் முறையே **அ.த.சா.ஆ. 1 முதல் 5** ஆகும். எதிரிகள் 5 பேரும் தாங்கள் செலவு செய்த பணம் போக மீதியுள்ள பணத்தை தாங்கள் தங்கள் வீடுகளில் வைத்திருப்பதாக கூறினார்கள். அதன் பிறகு திம்மசந்திரத்திற்கு நாங்கள் போனோம். எதிரிகள் 5 பேரும் அவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து பணத்தை எடுத்து வந்து ஒரு இடத்தில் வைத்தார்கள். மேலும் பணத்தை தவிர இரும்பு ராடு, கத்தி, செல்போன் மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் ஆகியவற்றை ஒப்படைத்தனர். அதனையும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுதிக்கொண்டு அதிலும் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். ஒரு எதிரி ஒரு இருசக்கர வாகனத்தையும், ஒரு செல்போனையும், பணம் ரூ. 7,500/- ம் ஒப்படைத்தார். அவர் பெயர் ஞாபகமில்லை. மற்றொரு எதிரி இரும்பு ராடும், செல்போனும், பணம் ரூ.7,500/- ஒப்படைத்தார், அவர் பெயரும் ஞாபகமில்லை. இன்னொரு எதிரி கத்தி, செல்போன். ரூ.7,500/- ஒப்படைத்தார், அவர் பெயரும் ஞாபகமில்லை. மற்றொரு எதிரி டிஸ்கவர் இருசக்கர வாகனத்தையும், செல்போன் மற்றும் பணம் ரூ.7,000/- ஒப்படைத்தார், அவர் பெயரும் ஞாபகமில்லை. மற்றொரு எதிரி ஒரு செல்போன் மற்றும் ரூ. 7,500/- ஒப்படைத்தார், அவர் பெயரும் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் **முதல்** எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல்

கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.6** ஆகும். என்னிடம் காட்டப்படும் **இரண்டாவது** எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.7** ஆகும். என்னிடம் காட்டப்படும் **மூன்றாவது** எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.8** ஆகும்.
என்னிடம் காட்டப்படும் **நான்காவது** எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.9** ஆகும். என்னிடம் காட்டப்படும் **ஐந்தாவது** எதிரியிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அந்த **கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.10** ஆகும். போலீசார் எங்களிடம் கையொப்பம் எங்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள், விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

கேள்வி: நான் எத்தனை வருடங்களாக டாஸ்மாக் கடை ஊழியராக வேலை செய்கிறேன் என்றால் ?

பதில்: 2003 லிருந்து வேலை செய்து வருகிறேன்.

கேள்வி: நான் டாஸ்மாக்கில் என்ன வேலை செய்கிறேன் என்றால் ?

பதில்: விற்பனையாளராக வேலை செய்துக்கொண்டிருக்கிறேன்.

கேள்வி: நான் இதுபோன்ற வழக்குகளில் எதிலேனும் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் ?

பதில்:ஏற்கனவே தேன்கனிக்கோட்டை நீதிமன்றத்தில் 2 வழக்குகளில் சாட்சியமளித்துள்ளேன். இந்த வழக்கு 3வது வழக்கு

கேள்வி: அந்த வழக்குகளிலும் என்னுடன் ஈஸ்வரன் என்பவரும் சாட்சியமளித்துள்ளார் என்றால் ?

பதில்: ஆமாம்.

கேள்வி: நாங்கள் அன்றைய தினம் ஆய்விற்காக சென்றோமா அல்லது பார்வையிட மட்டும் சென்றோமா என்று கேட்டால்?

பதில்: ஆய்விற்காக தான் சென்றோம்.

கேள்வி: நாங்கள் தான் எப்போதும் ஆய்விற்கு செல்வோமா என்று கேட்டால் ?

பதில்: இல்லை, எங்கள் அலுவலகத்திலிருந்து போன் மூலம் தகவல் வரும் யார் சொல்கிறார்களோ அவர்கள் போவோம்.

கேள்வி: என்னுடைய உடனடி மேல் அதிகாரி யார் என்றால்?

பதில்:  கடை மேற்பார்வையாளர் தான்.

கேள்வி: பொதுவாக எங்கள் பகுதியில் உள்ள கடைகளுக்கு ஆய்விற்கு செல்லும்போது எங்கள்  கடை மேற்பார்வையாளருடன் தான்  நான் செல்வேன் என்றால் ?

பதில்: சரிதான், ஆனால் மேற்படி மேற்பார்வையாளரின் கடையில் பணிபுரியும் விற்பனையார் இல்லாத காரணத்தினால் அவர் என்னை அழைத்தார்.

கேள்வி: வெளிகடைக்கு ஆய்விற்காக சென்றால் அதுபற்றிய தகவலை எங்கள் உயர் அதிகாரிகளுக்கு நாங்கள் எழுத்துமூலமாக தகவல்  தெரிவித்து விட்டு தான் செல்வோம் என்றால்  ?

பதில்: போன் மூலம் எங்களுக்கு தகவல் வந்தால் எழுத்துமூலம் நாங்கள் யாருக்கும் தகவல் தெரிவிப்பதில்லை, எங்கள் கடையில் உள்ள லெட்ஜரில் வெளிகடைக்கு ஆய்வுக்கு செல்வதாக எழுதிவிட்டு செல்வோம்.

கேள்வி: மேற்படி சம்பவத்தின்போதோ அல்லது அதன் பிறகோ போலீசார் எங்கள் கடைக்கு வந்து அவ்வாறு லெட்ஜர் பதிவேடுகளை ஆய்வு செய்தனரா என்று கேட்டால் ?

பதில்: இல்லை.

கேள்வி: புளியரசி காட்டிற்கு அருகில் போலீசார் விசாரித்துக்கொண்டிருந்ததாக கூறுகிறேன், மேற்படி கிராமத்திற்கும் அவ்வாறு விசாரித்துக்கொண்டிருந்த காட்டு பகுதிக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால்  ?

பதில்: எனக்கு தொலைவு சரியாக தெரியவில்லை.

கேள்வி: நாங்கள் விசாரித்துக்கொண்டிருந்த பகுதிக்கு சென்றபோது 5 எதிரிகளை போலீசார் எங்கு வைத்து பிடித்தனர், அவர்களை எவ்வளவு நேரமாக அங்கு விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ?

பதில்: எனக்கு தெரியாது.

கேள்வி: நாங்கள் அந்த இடத்திற்கு சென்றபோது பொதுமக்கள் எவ்வளவு பேர்  இருந்தார்கள் என்றால்  ?

பதில்: 3 , 4 பேர் தான் இருந்திருப்பார்கள்.

கேள்வி:  அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால்?

பதில்:  எனக்கு தெரியாது.

கேள்வி: போலீசார்  விசாரித்துக்கொண்டிருந்த இடத்திற்கு நாங்கள் செல்லும்பொழுது எதிரிகளிடமிருந்து ஏதாவது பொருட்களை கைப்பற்றி வைத்திருந்தார்களா என்றால் ?

பதில்: இல்லை.

கேள்வி: போலீசார் விசாரித்துக்கொண்டிருந்த இடத்தில் நாங்கள் எவ்வளவு நேரமாக இருந்தோம் என்றால்?

பதில்: சுமார் 1/2 மணி நேரம் தான் இருந்தோம்.

கேள்வி: யார் யாரிடம் சொன்னார்கள், அதை யார் எழுதினார்கள் என்று கேட்டால் ?

பதில்: எதிரிகள் காவல் ஆய்வாளரிடம் கூறினார்கள், அதனை எழுதவில்லை, தட்டச்சு தான் செய்தனர்.

கேள்வி: எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துவிட்டு கிராமத்திற்கு அழைத்து சென்று எதிரிகளிடமிருந்து பொருட்களை கைப்பற்றிவிட்டு எந்த இடத்தில் எங்களிடம் போலீசார் கையொப்பம் வாங்கினார்கள் என்றால்?

பதில்: திம்மசந்திரத்தில் வாங்கினார்கள்.

கேள்வி: திம்மசந்திரத்தில் எங்களிடம் கையெழுத்து வாங்குவதற்கு 1/2 மணி ஆனதா அல்லது 1 மணி நேரம் ஆனதா என்று கேட்டால் ?

பதில்: நாங்கள் எங்களுடைய அறிக்கையை எங்கள் கடையில் கொடுப்பதற்காக வந்துவிட்டோம், அதன் பிறகு மறுபடியும் போலீசார் எங்களுக்கு இரவு 7 மணிக்கு போன் செய்தார்கள், அப்போது தான் திம்மசந்திரத்திற்கு போனோம், எதிரிகள் பொருட்களை எடுத்து வந்து வைத்தார்கள்.

கேள்வி: திம்மசந்திரத்தில் யார் யார் வீட்டிற்கு யார் யார் போனார்கள் அவர்களுடன் போலீசார் யார் போனார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ?

பதில்: தெரியாது.

கேள்வி: அந்த பொருட்களை எந்தெந்த வீட்டிலிருந்து எந்தெந்த பொருட்களை எடுத்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால்?

பதில்: தெரியாது.

கேள்வி: நான் கையெழுத்து செய்த ஆவணங்கள் அனைத்தும் டைப் செய்யப்பட்டது என்றாலும், எந்த ஆவணமும் கையால் எழுதியதாகவோ அல்லது கார்பன் வைத்து தயாரிக்கப்பட்டதாகவோ இல்லை என்று சொன்னால் ?

பதில்: சரிதான்.

கேள்வி: மொத்தமாக எத்தனை நகல்கள் எடுக்கப்பட்டது என்றாலும் என்னிடம் எத்தனை ஆவணங்களில் பெறப்பட்டது என்றால் ?

பதில்: கார்பன் வைத்து எடுக்கவில்லை, 5 ஒப்புதல் வாக்குமூலங்களிலும் 5 பொருட்கள் கைப்பற்றிய ஆவணங்களிலும் நாங்கள் கையொப்பம் போட்டோம்.

கேள்வி: நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் என்னையும் ஈஸ்வரனையும் தவிர வேறு யாரும் கையொப்பம் போடவில்லையா என்றால் ?

பதில்: ஆமாம்.

கேள்வி: செல்போன்கள் கைப்பற்றியதாக கூறுகிறேன்,அந்த செல்போன்களில் சிம் இருந்ததா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ?

பதில்: தெரியாது.

கேள்வி: கைப்பற்றப்பட்ட பணம் என் பண வகைகளாக இருந்தது என்றால் ?

பதில்: ஒவ்வொரு ரூ. 7,500/- கைப்பற்றப்பட்ட பணங்களில் 7 ரூ. 1000/- நோட்டுக்களும் ஒரு ரூ. 500/- நோட்டு இருந்தது. ரூ 7,000/- கைப்பற்றப்பட்ட பணத்தில் 7 ரூ. 1000/- மட்டும் இருந்தது.

கேள்வி: நான் சொல்வதுப்போல் என் முன்பாக எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரிகள் எந்த பொருட்களையும் எங்கள் எதிரில் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றாலும், புகார் தாரர் எங்களுடைய டாஸ்மாக் ஊழியர் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால்?

பதில்: சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

E SASIKALA

Digitally signed by E SASIKALA
Date: 2024.03.13 19:07:32 +0530